நூலகம்

## ★ அரசின் பாதுகாப்பு நடவடிக்கைக்கு அமெரிக்கா ஆதரவு

விலை ரூபா 5. 00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 09 இதழ் 139
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 23 - 6 - 1995

(சென்னை)

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும்-இலங்கை இராணுவத்துக்கும் நடந்துவரும் போரில், அமெரிக்க இலங்கை அரசுக்கு தனது ஆதரவை தரும் என சென்னை வந்த இந்தியாவுக்கான அமெரிக்க தூதுவர் பிராங் வைஸ்னர் தெரிவித்துள்ளனர்.

புலிப் போராளிகளுக்கு எந்தவித ஆயுதமும் கிடைக்காமல் செய்ய அமெரிக்கா கவனம் செலுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சென்னையில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் பேசும்போது மேலும் கூறியதாவது:

(6ம் பக்கம் பார்க்க)

## காத்தான்குடி முஸ்லீம்கள் வெளியேறுவதாக வதந்தி

(கொழும்பு)

காத்தான்குடியிலிருந்து முஸ்லீம் மக்கள் எவரும் வெளியேறவில்லையெனவும் கொழும்புப் பத்திரிகைகள் உண்மைக்கு மாறான வகையில் செய்திகளை வெளியிட்டு மக்களை தவறான வழியில் இட்டுச்செல்கின்றன எனவும்துறைமுகங்கள் அபிவிருத்தி மற்றும் கப்பல் போக்குவரத்து புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்: விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலால் பெருமளவு முஸ்லிம்கள் காத்தான்குடியைவிட்டு வெளி

(6ம் பக்கம் பார்க்க)

### வடக்கு—கிழக்கு யுத்தத்தை தொடர

# இராணுவத்தை பலப்படுத்தும் அரசின் முயற்சியில் தடங்கல்!

## விட்டுச் சென்றோர் திரும்பவில்லை புதியவர்களுக்கும் ஆர்வமில்லை

[கொழும்பு]

இராணுவத்திற்கு புதியவர்களை சேர்த்துக்கொள்ளும் திட்டம் போதிய வெற்றியைக் கொடுக்காததினாலும், இராணுவத்தைவிட்டு தப்பிச் சென்றோரில் பலர் பொது மன்னிப்பை ஏற்று மீண்டும் யுத்த முனைக்குச் செல்ல முன்வராததினாலும் இலங்கை இராணுவம் ஆளணி பற்றுக்குறையை எதிர்நோக்குவதாக ஏஜென்ஸி செய்தி நிறுவனமொன்று தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கில் யுத்தத்தை முழுமையாகத் தொடர்வதாயின் மேலும் எழுபதினாயிரம் பேரை இராணுவத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என இலங்கை இராணுவ தலைமைப்பீடம் அண்மையில் கணித்திருந்தது. ஆனால் விடுதலைப்புலிகளின் பலமான இராணுவ யுக்திகளை எதிர்த்து வடக்கு கிழக்கில் முழுமையான யுத்தமொன்றை நடாத்துவதாயின் இராணுவத்தின் ஆள்பலம் மேலும்

(6ம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தில் இணைவதற்கான கால அவகாசம் நீடிப்பு

(கொழும்பு)

இராணுவத்தை விட்டு தப்பிச் சென்றோர் பொதுமன்னிப்புத் திட்டத்தின் கீழ் மீண்டும் இராணுவத்தில் இணைந்து கொள்வதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இத்தகையோர் இம்மாதம் 20ம் திகதிக்கு முன் மீண்டும் இராணுவத்தில் இணைந்தால், அவர்கள் விசாரணை, தண்டனை எதனையும் எதிர்நோக்க வேண்டி வராதென அரசு அறிவித்திருந்தது.

இக்கால அவகாசத்தை இம்மாதம் 26ம் திகதி வரை அரசு நீடித்திருக்கிறது. க-கி

## இலங்கையிலேயே அதிகமானோர் படையை விட்டு ஓடுகின்றனர்

(லண்டன்)

படையிலிருந்து தப்பிச் செல்வது இலங்கை இராணுவத்திலேயே அதிகளவில் இடம் பெறுவதாக லண்டன் பி பி. ஸி. தெரிவித்துள்ளது.

இலங்கையில் கடந்த காலங்களில் சுமார் 25 ஆயிரம் பேர் இராணுவத்தைவிட்டு தப்பிச் சென்றிருக்கிறார்கள் கடற்படை, ஆகாயப்படையினரும் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி படையை விட்டு தப்பிச் சென்றிருப்பதாக பி. பி ஸி. தெரிவித்துள்ளது. க-கி

## பாணந்துறை பொல்கொட ஏரியில் மேலும் நான்கு மர்மச் சடலங்கள்

[கொழும்பு]

பாணந்துறை பொல்கொட ஏரியில் மேலும் 4 சடலங்கள் மிதந்து வந்துள்ளதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

இச்சடலங்கள் அடையாளம் காணமுடியாதவாறு சிதைவடைந்த நிலையில் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் பொல்கொட ஏரியில் மிதந்து வந்த எட்டுச் சடலங்கள் மீட்கப்பட்டு கொழும்புச் சவச்சாலையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

பொல்கொட ஏரியில் மனித சடலங்கள் மிதந்து வருவதால் இப்பகுதியல் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை 12 சடலங்கள் இந்த ஏரியில் மீட்கப்பட்டதா

(5-ம் பக்கம் பார்க்க)

## விறகுவெட்டச் சென்றவர் ராணுவம் சுட்டு படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மாதகல் இராணுவ முகாம் இராணுவத்தினர் குறிபார்த்துச் சுட்டதில் பண்டத்தரிப்பு பகுதியில் ஒருவர் வயிற்றுப் பகுதியில் படுகாயமடைந்தார்.

பண்டத்தரிப்பு பனைக்காணி பகுதியில் விறகு வெட்டி வருவதற்காகச் சென்றவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவராவார்.

நேற்று மாலை 6 மணிக்கு

(6ம் பக்கம் பார்க்க)

## காலியில் குண்டு வெடிப்பு; நால்வர் படுகாயம்; வீடு சேதம்

(கொழும்பு)

காலி-டிக்ஷன் வீதியிலுள்ள வீடு ஒன்றில் நேற்று அதிகாலை குண்டு ஒன்று வெடித்ததினால் சிறுமி ஒருவர் உட்பட நான்கு பேர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் காலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள்,

குண்டு வெடிப்பினால் அவ்வீடு பாதிக்கப்பட்டுள்ளது.

உடனடியாக அவ்விடத்

(5-ம் பக்கம் பார்க்க)

## உலக அழகியை அழைத்து வெளிநாட்டவரைக் கவர முயற்சி

[கொழும்பு]

நலிவடைந்து செல்லும் உல்லாசப் பிரயாணத்துறையை மீண்டும் கட்டிஎழுப்பும் முயற்சியில் இலங்கைஅரசு புதிய தந்திரோபாயங்களை கையாள்வதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

உலக அழகு ராணியாக தெரிவு செய்யப்பட்ட ஐஸ்வர்யா மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இன்று இலங்கை வருகிறார்.

[5ம பக்கம் பார்க்க]

பக்தர் குறை தீர்க்கும் பருளாயில் ...... இன்று
:: ஈசுர விநாயகர் கொடியேற்றத் திருவிழா ::
(சி-1524)
— சோழியபுரம் பத்ம வெளியீடு

# வரி விளம்பரம்

## புலமைப் பரிசில்

ஆண்டு - 5 புலமைப் பரிசில் தேர்வுக்கான வினைப் பத்திரம் 1, வினைப் பத்திரம் 2 க்குரிய ''பொது விவேகம். பொதறிவு'' வெளிவந்துவிட்டது. வெளியீடு: சுப்பிரமணிய புத்தகசாலை - யாழ்ப்பாணம், (ஏ-5027)

## விற்பனைக்கு

இரண்டு மாதம் நிரம்பிய பூச்சி நீக்கப்பட்ட பொம்மனேரியன் ஆண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:சி. சிவப்பிரகாசம், சந்தையடி. தொல்புரம் மத்தி, சுழிபுரம். (சி-1525)

## ஆண்டு-5 புலமைப்பரிசில்

ஆண்டு-5 புலமைப் பரிசில் 95 பரீட்சைக்காக புதிய பாடத்திட்டப்படி பயிற்சி வினத்தாள்கள் (விடைகளுடன்) ஒவ்வொரு மாதத்தின் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. அடுத்த வெளியீடு 25-6-95 பயிற்சி வினத்தாள்களையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். BOND 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (எ 5017)

## விசேஷ அன்ரனு

ரூபவாஹினி மட்ருஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு விசேஷ T. V. அன்ரனு பொருத்துதல், பழுதுபார்த்தல், T V. செட், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக்கொள்வதற்கு வீனஸ் டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ். 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி). யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. எ-5002)

## விபத்தில் பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை அம்மன் கோவில் வீதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் குடும்பப்பெண் ஒருவர் படுகாயமடைந்தார்,

மோட்டார் சைக்கிளில் சென்றவரான, சுதுமலையைச் சேர்ந்த விமலாதேவி தவராசசிங்கம்(36 வயது)என்றபெண்ணே படுகாயமடைந்தவராவார் 90-ரி

## இளைஞர்கள் கைது

(பண்டத்தரிப்பு)

பாடசாலைக்கு செல்லும் வழியில் மாணவி ஒருவரிடம் பின் தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்ததாக செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து இரு இளைஞர்களை சங்கானை காவல் துறையினர் கைது செய்துள்னர்.

சண்டிலிப்பாய் - கட்டுடை பிரதானவீதியில் வைத்துமேற்படி இளைஞர்கள் இருவரும் காவல்துறையினரால் மடக்கி பிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர். 72-ரி

## சைவப்புலவர் பரீட்சைமுடிவு

(யாழ்ப்பாணம்)

அகிலஇலங்கைச்சைவப் புலவர் சங்கத்தால் 1995 ஏப்ரல் மாதம்நடாத்தப்பட்ட சைவப் புலவர் பரீட்சை முடிவுகள் வருமாறு:

இளம்புலவர்:

திரு. கா கமலநாதன்(இரண்டாம் பிரிவில் சித்தி) திரு. சி, நவரத்தினம் (மூன்ரும்பிரிவில் சித்தி) திரு. கொ. கோவிந்தர் (மூன்ரும் பிரிவில்சித்தி) செல்வி. விமலரஞ்சினி- மயில்வாகனம் சித்தாந்தசாத்திரம் நூனசித்தி)

சைவப்புலவர்; திருமதி. ஜெயபாலன்-கலாவாணி (மூன்ரும் பிரிவில்சித்தி)

# 3000 கோடி ரூபா செலவில் காலியில் சர்வதேச துறைமுகம்

(கொழும்பு )

காலியில் புதிதாக சர்வதேச துறைமுகம் ஒன்று விரைவில் நிறுவப்படவுள்ளது. காலி துறைமுகத்திலிருந்து சுமார் ஒருமைமயில் தூரத்தில்நிறுவப்பட இருக்கும் இந்தசாவதேச துறைமுகத்துக்கு சுமார் மூவாயிரம் கோடி ரூபா செலவு செய்வதற்கு பல வெளிநாட்டு நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

மேற்படிதுறைமுகம் நிர்மாணிக்கப்பட்டதும். 20- வருடங்களுக்கு இத்துறைமுகத்தை நிர்மானித்த நிறுவனங்கள் பராமரித்து வரும். இதன் பின்பு இத்துறைமுகம் இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்படும். வி-சி

# 'நாம் போராடாவிட்டால் நமது இனம் அழியும்'

(வட்டுக்கோட்டை)

'நாம் போராட்டத்திற்கு கொடுக்கும் மதிப்பு எவ்வளவோ அதே போன்று கல்விக்கும் கொடுத்து வருகின்றோம். இன்றைய காலகட்டத்தில் போராட்டமும் தேவை. கல்வியும் தேவை. கல்விக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்து போராட்டத்தில் ஈடுபடாமல் தவிர்த்துக் கொள்வோமேயானால் எமது இனம் அழிந்துவிடும்'

அராலி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய சங்கானைக் கோட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு செ: அற்புதன் இவ்வாறு கூறினுர்.

கல்லூரி அதிபர் ச. செல்வராசா தலைமையில் நடைபெற்ற. இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய சங்கானைக் கல்விக்கோட்ட கல்விப்பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் உரையாற்றும் போது கூறியதாவது செல்வங்களுள் கல்விச் செல்வமே மேலானது கல்வியை வளர்க்க சகல பெற்றோரும் முன்வரவேண்டும். கல்விக்காக பணியாற்றும் ஆசிரியர்களை சகலரும் மதிக்கவேண்டும் என்று கூறினுர்.

இக்கல்லூரியில் உப அதிபர் திரு.நா. நடனசண்முகதாசன் வரவேற்புரை நிகழ்த்தினார். 139-ரி

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு அரச ஒய்வூதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சித்தன்கேணி கணேசவித்தியாசாலையில் டாக்டர் ஆ.இராசநாயகம் தலைமையில் நடைபெறும்;

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## வெளிவாரிப் பட்டப் படிப்புப் பதிவு 1994/95

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 1994/95 கல்வியாண்டிற்குப் பின்வரும் கற்கைநெறிகளுக்கு வெளிநிலைத் தோவுநாடியாகப் பதிவுசெய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளட்படும்.

1. வர்த்தக முதற் கற்கை நெறி
2. கலை முதற் கறகை நெறி
3. பொதுக் கலைமாணி பகுதி 1
4. சிறப்புக் கலைமாணி பகுதி 1
5. வர்த்தகமாணி பகுதி 1

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலைமாணிக் கற்கைநெறிக்குப்பதிவு செய்துகொள்ளலாம்.

இந்து நாகரீகம், வரலாறு, புவியியல், பொருளியல், மெய்யியல். அரசறிவியல். தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரீகம்.

விண்ணப்பப்படிவங்களுக்கு உரிய விபரங்கள் யாழ்ப்பாணப் பலகலைக்கழகத்தின் வெளிநிலைப் பதிவுகள், பரீட்சைகள் அலகு அலுவலகத்தில் இருந்து நேரடியாகவோ, தபால் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாகப் பெற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தில் இருக்கும் மக்கள் வங்கிக்கிளையில் ரூ: 50/- செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டைச்சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் இவற்றைப்பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளருக்கு எழுதப்பட்ட ரூ. 50/- பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபால் கட்டளையுடன் சுய முகவரியிடப்பட்ட ரூ. 12/50 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 28X20 செ: மீ. அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

ஏற்கனவே பதிவு செய்துள்ளோருக்கு இவ்வறிவித்தல் ஏற்புடையதல்ல.

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்
திருநெல்வேலி யாழ்ப்பாணம்.

(எ-5032)


## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

23-06-1995

வெள்ளி இரவு

8-02 கலைமஞ்சரி நிகழ்ச்சியில் முதலில் அறிமுகம் கலை பண்பாட்டுக்கழக ஆதரவுடன் நிதர்சனம் தயாரித்து வழங்கிய "முகங்கள்'' வீடியோபடம் அடுத்து சிறுகதை சி.கண்ணம்மா எழுதிய" ஒட்டுண்ணிகள் நிறைவாககவிதை இ. செல்வரட்ணம் எழுதிய ''என்நாடு வளம் கொழிக்கும் பொன்நாடு'
8 25 கணப்பொழுது
8-30 செய்திகள்
8-40 அரசியல் அரங்கம்
8-50 ',ஏர்முனை கிழங்கினங்கள்'' குறுநாடகம்

24-06- 1995

சனி காலை

7-02 மாவீரவணக்கம்
7-15 நிங்கள் கேட்டவை
7 30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
8-00 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

23-06-1995

வெள்ளி மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சிகீதம்
5-10 புதியவை
5-15 கணநேரக்காவியங்கள்
5-30 மண்ணின் குரல்
5-40 நேயர் கடிதங்கள்
5-45 வெற்றிலைச்சுவடுகள்
6-00 சிந்தனைக்குச் சிலவிநாடிகள்
6-02 நாடகம் ''பொம்பிளை பார்க்கப்போறம்,, அங்கம்7
6-10 விளையாட்டுச் செய்திகள் விளையாட்டுச் செய்திகளைத் தொடர்ந்து என் தெரிவு


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இலங்கை:

## வெற்றிடங்களை நிரப்பும் பட்டியல் (5வது படி) கல்வி ஆண்டு 1993/94

## கற்கை நெறி பௌதீக விஞ்ஞானம்

மேற்படி கற்கை நெறிகளுக்கான வெற்றிடம் நிரப்பும் பட்டியலில் மேலும் ஐவர் (வெட்டுப் புள்ளி-211) தெரிவு செய்யப்பட்டு அவர்களின் பெயர்ப்பட்டியல் யாழ். பல்கலைக் கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. தெரிவுசெய்யப்பட்டோர் தம்மை 29-06-1995ற்கு முன் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களை யாழ்.பல்கலைக் கழக பரீட்சைக்கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்
[எ-5038]


## தட்டச்சு பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலையை விட்டு விலகிய இளைஞர் யுவதிகளின் நன்மை கருதி' வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம். வதிரியில் எதிர்வரும் 1ம் திகதி முதல் தமிழ், ஆங்கில தட்டச்சுப் பயிற்சி வகுப்புக்களை நடாத்தவுள்ளது படிக்கவிரும்பும் மொழியில் திறமைச் சித்தியுடன், கணிதம் உட்பட க. பொ த (சா[ த) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களை வதிரியில் உள்ள வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகத்தில் வார நாட்களில் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி: 23. 06. 95 சி

## இன்று

(உடுவில்)

சுன்னுகம் மயிலணி கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றன. அடுத்தமாதம் 3 ஆம் திகதி தேர் திருவிழாவும் 4ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்-

திருவிழா காலங்களில் தினமும் 5மணிக்கு திரு. ஆறு. திருமுகன் 'கந்தபுராணம்' பற்றி சொற்பொழிவாற்றுவார். 109

0 0

(உடுவில்)

யாழ்ப்பாணக்கல்வித்திணைக்கள வலயம் இரண்டின் சங்கானை கல்விக் கோட்டத்தினர் கல்வி கலாச்சார விளையாட்டு அபிவிருத்தி சபையின் ஆதரவுடன் இன்றும் நாளையும் மாபெரும் கலைவிழாவொன்றினை நடாத்தவுள்ளனர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் இன்றும் நாளையும் பிற்பகல் 1.30 மணி தொடக்கம் 4-30 மணிவரை கலைவிழா நடைபெறும். 109

0 0

(வட்டுக்கோட்டை)

சுன்னுகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்ருேர் நலன்விரும்பிகளின் உதவியுடன் கொள்வனவு செய்யப்பட்ட மேலைத்தேச 'பாண்ட்' வாத்திய அரங்கேற்றம் இன்று 23ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் கல்லூரி அதிபர் ஆ. கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது 139

0 0

(யாழ்ப்பாணம்)

கைதடி வடக்கு அருள்மிகு கயிற்றசிட்டி கந்தசுவாமி தேவஸ்தான மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீடு தேவஸ்தான மண்டபத்தில் இன்று 23ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 30 மணிக்கு தேவஸ்தான பரிபாலன சபைத்தலைவர் திரு,விஸ்வநாதன் கனகசபாபதி தலைமையில் நடைபெறும்.

0 0

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தினுல் புதிதாக ஆரம்பிக்கப் படவுள்ள பாடசாலை உபகரண காகிதாதி விற்பனை நிலையம் காங்கேசன்துறை வீதி கொக்குவிலில், கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் இ. மகேந்திரனுல் இன்று 23 திகதி வெள்ளிக்கிழமை காலை 9. 30 மணிக்கு ஆராம்பித்து வைக்கப்படவுள்ளது

கிளை இல. 17கோண்டாவில் கிழக்கு கிளையும், கிளை 21 பரமேஸ்வர சந்திக் கிளையும் இன்று 23 திகதி வெள்ளி காலை 9.30 மணிக்கு வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுசெயல்படவுள்ளது.

0 0 0 0

(நெல்லியடி)

மந்திகை மருத்துவமனை விநாயகர் ஆலயத்தில் பிரெஞ் வைத்தியக் குழுவினரின் பொங்கல் விழாஇன்றுகாலை 11மணிக்குநடைபெறும். 160

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

### மணிவாக்கு

கஷ்டமான காலங்களில் முட்டாள் தனமான யோசனைகள் கூடக் கெட்டிக்காரத் தனமாகத் தோன்றும். முயன்று பார்த்தபிறகு தான் அவை முட்டாள் தனமானவை என்று புரியும்.

- கண்ணதாசன்.

## நமது நோக்கு

### பாதுகாப்பு வரி

அரசு முகம்கொடுத்து நடத்தும் போருக்கு மேலும் 550 கோடி ரூபா தேவைப்படுகிறது என்று போரை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்தி நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து புதிய அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்குவதற்கென்று நியமிக்கப்பட்ட பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் அவர்கள் நாடாளுமன்றத்தைக் கோரினார். பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டுப் பிரேரணை விவாதத்தை முடித்து வைத்துப்பேசும் போதே அவர் இவ்வாறு பேசினார் இவ்வரியை விதிப்பதன் மூலம் சகல சிங்கள மக்களையும் தமிழர்களுக்கு எதிரான போரில் பங்குதாரர்களாக்க அரசு எண்ணியுள்ளது அதன் மூலம் சகல சிங்களவர்களும் தங்களது உடனடித் தேவைகளை மறந்து தமிழர்களுக்கு எதிராக ஒன்று சேர்ந்து ஆதரிப்பர் என்று அரசு எதிர்பார்க்கிறது. பௌத்த சிங்கள பேரினவாத கொள்கையால் ஊட்டப்பட்ட சிங்களவர்கள் விரும்பியோ விரும்பாமலோ அவ்விதம் செய்யவும் கூடும்.

ஆனால் இந்தப்பாதுகாப்பு வரி திருத்தச்சட்டத்துக்கு தமிழர்களின் பிரதிநிதிகளென்று கூறிக் கொள்ளும் உதிரித் தமிழ்க் குழுக்களும் இலங்கை தொழிலாளர் காங்கிரசும் தங்களது வாக்குகளை ஏன் அளித்தனர்? இது தமிழ் மக்களின் நீதியான நியாயமான விடுதலைப் போரைக் காட்டிக் கொடுக்கும் ஐந்தாம் படைவேலை. அவர்களுக்கு இது கைவந்த கலை. தங்களது சுய ஆதாயத்திற்காக அவர்கள் எதையும் செய்வர். ஈ. பி. டி. பீ. புளொட் போன்ற அமைப்புகள் இவ்விதம் செய்வது ஆச்சரியமல்ல. ஒருகாலத்தில் தமிழீழமே தாரக மந்திரமாக உதட்டளவில் பேசிக்கொண்டு திரிந்த இவர்கள் பின்னர் பல வழிகளாலும் தமிழர் தாயகக் கோட்பாட்டை கைவிட்டு ஒற்றை ஆட்சி மூலம் ஐக்கிய இலங்கையை பிரதிநிதித்துவப் படுத்தும்சிங்கள ஆட்சியாளர்களுக்குபின்னால்செயல்படத் தொடங்கினர். ஆகவே இவர்களின் செயல் அவர்களுக்கே உரித்தான பண்பு.

இலங்கைத் தொழிலாளர்காங்கிரசோ வெனில் தொண்டமான் பொதுசன ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சராகவும் ஏனைய அங்கத்தவர்கள் ஐ. தே. க. சின்னத்தில் வெற்றிபெற்று எதிர்க்கட்சி வரிசையிலும்அமர்ந்துள்ளனர்: இந்த அவல நிலையிலும் கூட தொண்டமானும் எதிர்க்கட்சியிலிருக்கும் அவரின் சகாக்களும் ஒன்று சேர்ந்து அரசாங்கத்தை ஆதரித்துள்ளனர். ஆகவே தமிழர்களுக்கெதிரான சிங்கள அரசின் பாதுகாப்பு வரிச் சட்டத்துக்கு ஆதரவு வழங்கியதினால் அவர்களும் தமிழர்களின் விரோதிகளாகவே கணிக்கப்பட வேண்டியவர்களாகும். இருந்திருந்துவிட்டுபொன்மொழிகளை உதிர்க்கும் தொண்டமான் உண்மையில் ஒரு உறுதிப்பாடான நிலையைக் கொண்டவரல்ல.

தமிழர் விடுதலைக்கூட்டணியினர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை, இது எதைக்குறிக்கிறது? பாம்புக்கு வாலையும் மீனுக்குத் தலையையும் காட்டும் அவர்களின் நிலைப்பாட்டையே எடுத்துக்காட்டுகிறது. ஒட்டு மொத்தமாக பார்க்கும் போது பாதுகாப்பு வரிச் சட்டத்துக்கு ஆதரவளித்த தமிழர்கள் விரோதிகள்தான்.

# சுகாதாரமற்ற நடத்தையினால் பல நோய்கள் ஏற்படும் அபாயம்!

## சுகாதார அதிகாரி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

எயிட்ஸ் போதைவஸ்துப் பாவனை, செங்கமாரி 'பி' போன்ற நோய்கள் அண்மைக்காலத்தில் எமது பகுதிகளில் இனம் காணப்பட்டுள்ளன. இவை தற்சமயம் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன. ஆனால், ஏனைய நாடுகளின் அனுபவத்தைப் பார்க்கும் போது நாம் முன்னெச்சரிக்கையாகத் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்காவிட்டால் இப்பிரச்சனை வெகுவிரைவில் பெருகி பாரதூரமான விளைவுகளை எமது சமுதாயத்திற்கு ஏற்படுத்தலாம் இது சம்பந்தமான எச்சரிக்கையை உலக சுகாதார நிறுவனமும், ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியமும், எமது நாட்டிற்கும் ஏனைய இப்பிரதேச நாடுகளுக்கும் விடுத்திருக்கின்றன.

இவ்வாறு யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கை மேலும் தெரிவிக்கையில் மாநகர சுகாதாரப்பகுதி இதனைக் கருத்திற் கொண்டு சில முக்கிய தடுப்பு நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நடைமுறைப் படுத்துகின்றது ஆரம்ப கட்டத்தில் வெளிக்கள சுகாதார ஊழியர்களுக்கான பயிற்சி நடத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இந்நோய்கள் பற்றிய தகவல் சுகாதாரக் கல்வி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துகின்றோம். இதில் சில முன்னணிப் பாடசாலைகளில் உயர்தர மாணவர்கள், மாணவத் தலைவர்கள். ஆசிரியர்களுக்கான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்றும் சுகாதாரவைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்'

நாளை சனிக்கிழமை 24-ம் திகதி நாவலர் கலாச்சார மண்டபத்தில் யாழ். மாநகர சபை சனசமூக நிலைய பிரதிநிதிகளுக்கான கருத்தரங்கு. ஐக்கியநாடுகள் சிறுவர் நிதியத்தின் உதவியுடன் நடாத்தப்படும் சனசமூக நிலையத் தலைவர்கள் மக்கள் நலன் கருதியும், பாடசாலை அதிபர்கள் மேல் வகுப்பு மாணவர்கள் நன்மை கருதியும் நிகழ்ச்சிகளை நடாத்த விரும்பினால் எமது சுகாதாரக் கல்விப் பிரிவையோ, ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் பகுதியையோ எமது காரியாலயத்தில் தொடர்பு கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். 170-ரி

## இராசி பலன்

23-06-1995

வெள்ளிக்கிழமை

[தமிழுக்கு ஆனி-09]

ஏகாதசி மு. இ. 11.19 வரை, அச்சுவினி காலை 10.36 வரை அமிர்தசித்தயோகம், ஏகாதசிவிரதம், இராகுகாலம் காலை 10.24 முதல் 11 54 வரை. சுபவேளை பி. ப.2.55 முதல் 4.25 வரை.

மேஷம்: தொழில் விருத்தி, தனசேர்க்கை, அதிகாரம்.

இடபம்: ஆரோக்கிய குறைபாடு, மனச்சுமை, சுபவிரயம்.

மிதுனம்: இனசனமகிழ்ச்சி, புதியமுயற்சி, காரிய சித்தி.

கடகம்: நண்பர்சகவாசம், பயணநன்மை, தெய்வதரினம்.

சிங்கம்: தொழில் சிக்கல், அமைதியின்மை, ஏமாற்றம்.

கன்னி: முட்டுக்கட்டை, தனிமைப்படல், அலைச்சல்.

துலாம்: தொழில் மாற்றம், குடும்பசுகம். பிறர்க்கு உதவுதல்.

விருச்சிகம்: பெண்நன்மை, முயற்சி வெற்றி, அதிகாரிகள் பராட்டு.

தனுசு: கண்டுடைப்பு, விரோத எண்ணம், வெறுப்பு.

மகரம்; சுபகாரியம், எதிர்பாராத நன்மை, பெரியோர் ஆசி.

கும்பம்: கலந்துரையாடல், மனமகிழ்ச்சி, விவேகமுடிவு.

மீனம்: நிறைவேறாத சந்தர்ப்பம், பணமுடை, அவச்சொல்.

— ஜோஸ்யர்

# புலிகளுடனான யுத்தத்திற்காகவே பாதுகாப்பு வரி அறவீடு!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடனான யுத்தத்துக்கு பெருந்தொகையான பணம் தேவைப்படுவதினாலேயே அரசாங்கம் பாதுகாப்புவரி திருத்தச் சட்டமூலத்தை கொண்டு வந்துள்ளது. இதைத் தவிர சாத்தியமான வேறுவழி இல்லை'

இவ்வாறு நீதி அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் நாடாளுமன்றத்தில் கூறினார்.

அமைச்சர் மேலும் உரையாற்றுகையில்; ஐ, தே க. அரசு பாதுகாப்பு வரியை மூன்று வருடங்களுக்கு நீடித்தது. இந்த வரியினால் தற்போது மக்களுக்கு கஷ்டம் ஏற்படுகின்றபோதிலும் இதை செலுத்துவதில் அவர்கள் தயங்கமாட்டார்கள் என்று கூறினார்:

இந்தவரி மக்கள் மீது மேலும் சுமையை ஏற்படுத்தும் பங்குச்சந்தை கொள்வனவை மேலும் பாதிக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க கூறினார்.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி. வி. குணரட்ண நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் முப்படையினருக்கும் தேவையான நிதியைத் திரட்டுவதற்காகவே இந்த வரி அறவிடப்படுகின்றன. யுத்தம் முடிவடைந்ததும் இந்தவரி உடனடியாக ரத்துச்செய்யப்படும் என்று கூறினார்.

முன்னைய அரசாங்கம் யுத்தத்தின் பெயரால் பல ஆயிரம் கோடி பணத்தை விரயமாக்கியது தற்போதைய அரசு இவ்வாறான நிலைமைகளுக்கு இடமளிக்காது என்று அமைச்சர் குணரத்தின கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ரி. சித்தார்த்தன் உரையாற்றுகையில்:

யுத்தத்தின் காரணமாக வடக்கிலும் கிழக்கிலும் அபிவிருத்தி வேலைகள் நிறுத்தப்பட்டு விட்டது தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கக்கூடிய அரசியல் தீர்வை அரசு முன் வைக்கவேண்டும். சமாதானம் பற்றிய நடவடிக்கைகளை அரசாங்கம் மக்களுக்குத் தெளிவாக விளங்கப்படுத்த வேண்டும் என்று கூறினார்

நாடாளுமன்ற உறுப்பினர் எச், எம். வீரசிங்க உரையாற்றுகையில்: பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் யுத்தத்தை நிறுத்துவதற்கும் தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் முக்கியத்துவம் கொடுத்தது என்று கூறினார். வி-ரி

### வெள்ளி விருந்து

## மூவர் தமிழ்

மூவர் தமிழ் முழுவதும் சிவனை முழு முதற்கடவுள் என்பதை எடுத்துக் கூறிச் சைவசித்தாந்தத்தை நிலை நாட்டும் இயல்பு வாய்ந்தது.

தேவாரங்கள் தோத்திர வடிவாக அமைந்தாலும் அவற்றில் எத்தனையோ பல அரிய பொருள்கள் பேசப்படுகின்றன. இறைவன் பெருமை, நீத்தார் பெருமை, இன்னா செய்யாமை, ஈகை, தவம், ஒழுக்கம், வாய்மை, நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், திருவைந்தெழுத்தின் பெருமை ஆகிய இன்னோரன்ன பல பொருள்கள் பற்றிய அருங்குறிப்புகளை மூவர் தமிழில் நாம் காணலாம்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் பற்றிய பாடல்களையும் நாம் காண்கிறோம். எடுத்துக்காட்டாக அப்பர் சுவாமிகள் தேவாரத்தில், ''நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா. நித்தம் எம்பிரானுடைய கோயில்புக்குப் புலர்வதன் முன் அலகிட்டு, மெழுக்கு மிட்டு, பூமாலை புனைந்து ...'' என வரும் திருத்தாண்டகத்தில் சரியைத தொண்டு பேசப்படுகின்றது.

பண்டித வித்துவான்
க. சி. நடராசன்
['சிவநெறி']

# மலேரியா தடுப்பு மருந்து

## கையாடல், விற்பனை முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியில் மலேரியா தடுப்பு இயக்கத்தில் கடமை புரிந்துவரும் வெளிக்கள உத்தியோகத்தர் ஒருவர் அப்பகுதி மக்களின் மலேரியா நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த இலவசமாக வழங்கிய அரச முத்திரையிடப்பட்ட 2000 குளோறோகுயின், 1500 பிறிமாகுயின் மருந்துக் குளிசைகளை மலேரியா நோயாளருக்கு வழங்குவதைக் குறைத்தும், வழங்காமலும் கையாடல் செய்துள்ளார்.

அம் மருந்து வகைகளை யாழ் நகரில் உள்ள ஆங்கில மருந்து விற்பனை நிலையம் ஒன்றிற்கு கடந்த சனிக்கிழமை விற்பனை செய்யும் வேளையில், தமிழீழ சுகாதார சேவைகள் பணியகத்தின் சிரேஸ்ட உணவு மருநது பரிசோதகர் திரு. சி. சிவசுப்பிரமணியம் அவர்களால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டுள்ளார்.

அம் மருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டதோடு, இச்சமூகவிரோத செயலில் ஈடுபட்ட அவ் ஊழியர் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோர் பற்றிய தகவல்களைத் தம்க்கு நேரிலோ அல்லது கடித மூலமோ தெரிவிக்குமாறு தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் மருந்து விற்பனை நிலைய உரிமையாளர்களைக் கேட்டுள்ளார். -ரி

## விளக்கு வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

விளக்கு பங்குனி - சித்திரை இதழ் அமரர் இ. சிவானந்தனின் அட்டைப் படத்துடன் வெளிவந்துள்ளது.

இவ் இதழில் எதிரொலி (வாசகர் கடிதம்) மொழி ஆற்றல் (ஆசிரிய தலையங்கம்), குழந்தைகள் வாழ்க, எனது அவா, விலை (சிறுகதை) சிவானந்தன் என்ற ஒரு மனிதன், புள்ளிகள் இழப்பதை தவிருங்கள், அகில உலக ஆசிரியர் நாள் தொடர்பான போட்டிகள் போன்ற பல விபரங்கள் வெளிவந்துள்ளன. -ரி

### பலதும் பத்தும்

#### 'சீனாவின் பசு'

''சீனாவின் பசு'' எனப் பட்டப் பெயர் பெற்றது எது தெரியுமோ? தாவரப் புரதத்திற்குப் பேர் பெற்ற சோயாதான் ...! இதில் நாற்பது வீதம் புரதம் உள்ளது.

இறைச்சியாற் கிடைக்கும் புரதம் உடலிலுள்ள யூறிக் அமிலத்தின் அளவை அதிகரிக்கும். அதனால் ... ? வாதம் போன்ற நோய்கள் பெருக வாய்ப்புண்டு. ஆனால் சோயாவிலிருந்து கிடைக்கும் புரதம் இந்த யூரிக் அமிலத்தைப் பெருக விடாது.

அதேவேளை — இதிலுள்ள சோடியம் குறைவாக இருப்பதால் ... 'குளொஸ்ரலின்' பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும், அதனால் ... இரத்த அழுத்த நோயாளருக்குச் சிறந்த உணவு. நீரிழிவுக் காரருக்கும் இது ஏற்ற உணவு என மருத்துவர்கள் கூறுகிறார்கள் ... !

— மயூரன்

# புதிய கல்வி வேண்டும்

# பாலரில் புதிய தொடக்கம்

**பொம்மைக் கலியாணம் பாலருக்கு உண்மைக் கலியாணம்: அப்போ பாலர் பாடசாலை...?**

உலகளாவிய ரீதியில் இடைமாறு கால கட்டத்திலும், தமிழீழ ரீதியில் ஆக்க கால கட்டத்திலும் வாழ்கிறோம். இடைமாறு காலத்தையும் ஆக்க காலத்தையும் ஒருங்கிணைப்பதற்கு ஏற்ற புதிய சிந்தனையையும், புதிய மனப்பாங்கையும் பெற வேண்டி உள்ளது.

உலகில்ஏற்பட்டுவரும் விரைவான மாற்றங்களுக்கு ஏற்ப எம்மை ஈடுகொடுக்கத்தக்க வகையிலும், சிறப்பான வாழ்க்கை முறையை ஸ்தாபிப்பதற்கு ஏற்ற வகையிலும் புதிய சிந்தனையைத் தேடவேண்டி உள்ளது.

21ஆம் நூற்றுண்டினை நாம் எமக்கேற்ற முறையில் எதிர்கொள்ளவேண்டும். ஒளியின் வேகத்திற் தகவல்களைப் பரிமாறக் கூடிய ஒப்ரோனித் தகவற் சமூக யுகத்தில் மனிதன் அடியெடுத்து வைத்து விட்டான். இதனைக் கருத்திற் கொண்டு எமது எதிர்கால வாழ்விற்கான திட்டமிடல்களை மேற்கொள்ளவேண்டியுள்ளது

கொழும்பு பல்கலைக் கழக கல்வியியல் விரிவுரையாளர் கோ. சந்திரசேகரன் (மலையகத்தைச் சேர்ந்தவர்) வீரகேசரி வாரமலர் (11-6-95) பத்திரிகைக்கு அளித்த பேட்டி இங்கு சுட்டிக் காட்டப்படத்தக்கது. ''பிள்ளைகளின் கல்விக்காகத் தம்மை அர்ப்பணிக்கும் பெற்றோர்களை யாழ்ப்பாணத்தில் அன்றி உலகில் வேறெந்த நாட்டிலும் காண முடியாது'' என்று அவர் கூறியதுடன் இலங்கையில் இருக்கும் கல்வித் திட்டம் குறைபாடானது என்றும், தகவல் மையச் சமூகத்திற்கு ஏற்ற வகையில் எதிர்காலத்திற்கான புதிய கல்வித் திட்டமிடல்களை மேற்கொள்ளவேண்டும் என்றும் கூறினர்.

புதிய யுகத்திற்கேற்ற வாழ்விற்கான திட்டமிடலின் முதற்படி சிறப்பான கல்வி முறை ஒன்றினை உருவாக்குவதிலிருந்து ஆரம்பமாகவேண்டும். இதற்கான அதிதொடக்கப் புள்ளி பாலர் பாடசாலையில் இருந்து உதயமாக வேண்டும்.

## கல்வி என்றால் என்ன?

இதுவரை காலமும் மனிதன் கண்டறிந்துள்ள அறிவுத் தொகுதியில் இருந்தும், பட்டறிந்த அனுபவத் தொகுதியில் இருந்தும் பொருத்தமானவற்றை தேர்ந்தெடுத்து எதிர்காலச் சந்ததியினரான சிறுர்களிடம் திட்டமிடப்பட்ட முறையில் ஒப்படைக்கப்படும் ஒரு முதுசொத்தாகிய முதுசம்தான் கல்வி ஆகும்.

இற்றைவரையான அறிவுச் செழிமையில் இருந்து எதிர் காலத்திற்கான ஒழுங்கமைப்பை ஏற்படுத்த உதவும் ஓர் உன்னதமான கருவியாய் கல்வி முறை அமைய முடிகிறது. பாலரின் அறிவு வளர்ச்சிக்கும் மனவளர்ச்சிக்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும், ஆரோக்கிய வளர்ச்சிக்கும் ஏற்றவகையில் பாலர் பாடசாலைகள் மிகவும் திட்டமிடப்பட்டு அமைக்கப் படவேண்டும். மனிதனது களங்கள் அனைத்தினதும் தாய்க்களமாய் அமைவது வீடு. ஆனால் வீட்டுக்கு வெளியே அமைக்கப்படும் முதலாவது சிறப்பான களம் பாலர் பாடசாலைதான்.

பாலர் பாடசாலைகள் வீட்டிற்கு வெளியே அமையும் தொடக்கக் களமென்பதாலும் பாலர் பூமிக்குப் பசுமையும் புதுமையும் நிறைந்த ஒரு புதிய உள்வரவு என்பதாலும் இப்பாலர் பாடசாலைகள் உளவியல் சார்ந்த மிகவும் நுணுக்கமான அணுகுமுறைகளுடன் அமைக்கப்படவேண்டும்.

மாசு, மறுஅற்ற கற்புக்குலையாத பசிய உள்ளத்தைக் கொண்டோர் பாலர், அவர்களது பசிய உள்ள உணர்வுகளுக்கூடாக அவர்கள் வழி நடத்தி வளர்க்கப்படவேண்டியவர்களாவர். பாலர் பாடசாலைகள் என்பது அவர்களது வாழ்க்கை முறையிலிருந்து அவர்களால் அதனைப் பிரித்துப்பார்க்க முடியாதவாறு அவர்களது எண்ண உணர்வுகளுடன் அவை இரண்டறக் கலக்கக் கூடியவாறு அமைக்கப்படவேண்டும். தம்மை அறியாமலே உணவையும் நீரையும் எவ்வாறு தமது தேவையாய்ப் பாலர் நாடுகிறார்களோ அவ்வாறே பாலர் பாடசாலைகளையும் அவர்கள் நாடக்கூடியவாறு அவை அமைக்கப்படவேண்டும்.

பாலர் பாடசாலைகள் பாலருக்கு நினைவிலும் இனிமை நிறைந்தனவாய் அமைய வேண்டும். பாலரின் விருப்பத் தேர்விற்குரிய ஒரு முக்கிய இடமாய்ப் பாலர் பாடசாலைகள் அவர்களது மனங்களில் இடம்பிடிக்கவேண்டும். கற்றலும், களிப்பூட்டலும், பண்பாட்டுப் பின்பற்றலும் நிறைந்த இடமாய் அவை அமைய வேண்டும். ஆசிரியர் சொல்லிக் கொடுப்பது மட்டுமல்ல கல்வி. அவர்களின் சூழலும் அவர்களுக்கு போதிக்கும் ஓர் ஆசானுய் அமையவேண்டும். செடி கொடிகளும், பசும் தளிர்களும், விளையாட்டுப் பொருட்களும் அவர்களுக்கு பாடம் போதிப்பவையாய் அமைய வேண்டும்.

வீடுகளின் தாள்வாரங்களிலும், மோட்டார் வண்டிக் கொட்டகைகளிலும் ஒடுங்கிய ஓலைக் கட்டிடங்களிலும் கோடிப் புறங்களிலும் பாலர் பாடசாலைகள் பல அமைக்கப் பட்டுள்ளன. இத்தகைய கட்டிடங்கள் பசிய கொழுந்து உள்ளங்களை நெரிசலுக்கு உள்ளாக்கி காயடித்து விடும். மனம் நெரிசலுக்கு உள்ளாகி சீற்றமும் சினமும் கொண்ட குறுகிய மனப்பாங்கு பெற்ற சந்ததியாய் அவர்களை ஆக்கி விடும். பாலர் பாடசாலைகள் விசாலமான இடங்களில் மிகவும் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டாற்தான் பாலரின் மனமும் விசாலமடையும்.

உத்தியோக மோக நோக்கில் காகிதத் தகைமைக்கு ஊடாகவே கல்வியை நோக்கும் ஒரு பாரம்பரியத்தை வெள்ளையர் எம்மிடத்தில் வளர்த்துள்ளார்கள். உத்தியோக மோகக் காகிதக் கல்வித் திணிப்பு பிள்ளைகளின் இயல்பான கல்விவளர்ச்சியை அத்துடன் கூடவே இணைந்த பண்பாட்டு வளர்ச்சியைப் பெரிதும் பாதித்து விடுகிறது. பல பெற்றோர் பிள்ளைகளின் கல்வியில் மிகவும் அக்கறை எடுக்கிறார்கள் என்பது உண்மைதான், ஆனால் அவர்களின் இயல்பிற்குப் பொருந்தாத வெறும் உத்தியோக மோகக் கறுப்புக் கண்ணாடிகளை அவர்களின் கண்களில் கட்டி அவர்களின் பார்வைகளை இயல்பற்றதாக்கி விடுகிறார்கள்.

இது தேசிய சமூக வளர்ச்சியை, மனித ஆளுமையை பாரதூரமாகப் பாதிக்கிறது. இந்தக் கறுப்புக் கண்ணாடிகளில் இருந்து பிள்ளைகள் விடுவிக்கப்படவேண்டும். பாலர் இதிற் தொடக்கம்.

பாலர் கல்வியை ஒரு சீரிய விடயமாக எடுத்து நாம் அதற்கு அதிக முன்னுரிமை கொடுக்க வேண்டும். பாலர் பாடசாலைகளை நடாத்துதல் என்பது தனிச் சிறப்பு தேர்ச்சிக்கு உரியது. பாலர், அவர்களது பசி உள உணர்வுகளுக்கு ஊடாக மிக நுணுக்கமாக அணுகப்பட வேண்டியவர்கள். இதில் ஆசிரியர்களின் பணி சிறப்பானது. இது அதிக உளவியல் சார்ந்த அணுகு முறைகளைக்கொண்டது. இதில் பணியாற்றும் ஆசிரியர்கள் போதிய ஊதியமற்றவர்களாய் இருக்குமிடத்து அவர்கள் தம்மை முழுமையாக ஈடுபடுத்திப் பணிபுரிய முடியாதிருக்கும். ஆசிரியர்கள் குறைந்தது மாதம் இரண்டாயிரம் ரூபாவாவது சம்பளம் பெற முடிந்தாத்தான் இதில் அவர்கள் அக்கறையுடனும் ஆர்வத்துடனும் செயற்பட முடியும்.

பாலர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு மண் விளையாட்டும், பொன் விளையாட்டு, பொம்மைக் கலியாணம் பாலர்களுக்கு உண்மைக் கலியாணம், வயதுவந்தோரின் காதல் குழப்பப்படுவதால் காதலர் இடையே ஏற்படும் தாக்கத்தை விடவும் பாலர்களின் பொம்மைக் கலியாணத்தைக் குழப்புவதால் பாலர்களின் மனதில் ஏற்படும் தாக்கம் சிலவேளை பெரிதாய் அமையக் கூடும் எனக் கருதப்படுகிறது இதனுல் பாலர்களின் மனங்களில் சிறிதும் உடைவோ ஒடிவோ ஏற்படாதவாறு அவர்கள் அதிக உளவியல் நுணுக்கங்களுடன் அணுகப்பட வேண்டும்.

இதற்காகப் பாலர் சம்பந்தமான புதிய, புதிய ஆய்வுகளில் நாம் ஈடுபட வேண்டும். மேலைத் தேசத்தவர்கள் பாலர்களைப் பற்றிச் செய்து வைத்துள்ள ஆய்வுகளையே நாம் பெரிதும் பின்பற்றுகிறோம். இதில் ஏற்கக் கூடிய சில பொதுமைகள் இருப்பினும் எமது பிள்ளைகள் எமது சூழலிலிருந்தே மனவளர்ச்சியையும், மற்றும் தாக்கங்களையும் வெறுகிறுர்கள். ஆதலினுல் எமது சூழலிலிருந்து எமது பாலர்களை நாம் கற்றறிய வேண்டும். எமது சூழலுடன் இணைத்து எமது பாலர்கள் புரியப்பட்டு அதற்கேற்ப அவர்கள் அணுகப்பட வேண்டும். எனவே எவ்வளவு பெருந் தொகையான பணத்தைச் செலவு செய்தும் பாலர் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

மேற்கூறிய அனைத்திற்கும் நிதி ஒரு பெரும் பிரச்சினை போல் தோனறும். ஆனல் இதற்கு வழியுண்டு. கேளிக்கைகளுக்கும், விழாக்களுக்கும் பெரும் தொகையான பணத்தினை எமது மக்கள் மிகச் சாதரணமாக அன்றுடம் செலவு செய்கிறுர்கள். விழாக்களையும், கேளிக்கைகளையும் நிராகரிக்க வேண்டும் என்றில்லை. ஆனுல் அவற்றை இரண்டாம் பட்சமாக்கி பாலர் பாடசாலைக்கான செலவை முதலாம் பட்சமாக்க வேண்டும். ஆலயங்களின் வருமானத்திலிருந்து ஒருபகுதியை அவர்கள் விரும்பி இப் பாலர்பாடசாலைகளுக்கென ஒதுக்கலாம். திருவிழாக்கள், மற்றும் விழாக்களுக்காக சேர்க்கப்படும் பணத்தில் ஒரு கணிசமான அளவு தொகையை பாலர் பாடசாலைக்கென ஒதுக்கலாம். பாடசாலைகள், பல்கலைக்கழகங்களில் இராப் போசன விருந்திற்காக சேர்க்கப்படும் நிதியில் ஒரு தொகையைஇதற்கென ஒதுக்கலாம். தர்மஸ்தாபனங்கள் தமது நிதியிலிருந்து இதற்கென ஒரு தொகையை ஒதுக்கலாம். பாலர் பாடசாலைகள் ஒரு முக்கிய விடயம் என்பதை உணர்ந்து கொண்டால் அந்தந்த ஊரில் உள்ளவர்களே அதற்கான நிதியைத் திரட்டலாம். பாலர் பாடசாலைகளே எமது எதிர்கால அனைத்து நிர்மாணங்களினதும் கருகூலங்கள்.

**மு. திருநாவுக்கரசு**

## பருத்தித்துறை வைத்தியசாலையில் கழிவு அகற்றலை சீராக்க நடவடிக்கை

(கொழும்புத்துறை]

பருத்தித்துறை வைத்தியசாலையில் கழிவு அகற்றல் வேலைகளை சீரமைப்பதற்கு யாழ். பிராந்திய சுகாதாரப் பணிமனை நடவடிக்கையெடுத்திருக்கிறது.

இதற்கமைய 7 லட்சம் ரூபா செலவில் வைத்தியசாலை கழிவு கான் திட்ட வேலைகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள்ஏற்கனவே யாழ். மாவட்ட நிர்மாணத் திணைக்களத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இக்கழிவுகான் திட்ட வேலைகள் கடந்த 15 வருடகாலமாக பூர்த்தியாக்கப்படாமல் இருந்து வந்தது.

இச்செயற்திட்டம் இன்னும் ஒரு மாத காலத்தினுள் பூர்த்தியாகிவிடும் என எதிர்பார்க்கப்படுவதால், வைத்தியசாலையின் சுகாதாரச் சீர்கேடுகள் விரைவில் சீராகும் நிலை தோன்றியுள்ளது. 154 கி

## சிரித்திரன் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

சிரித்திரன சித்திரை, வைகாசி, ஆனி இதழ் வெளிவந்துள்ளது. இவ்விதழில் கொய்த கொழுந்துகள், மதிப்பு, பல்லி சாத்திரம், உலகில் மகப்பெரிய குடித்தொகை கணக்கெடுப்பு, போன்ற தலைப்புகளில் விடயதானங்களும் மற்றும் நகைச்சுவைத்துணுக்குகளும், கவிதைகளும் வெளிவந்துள்ளன. ரி

## விதை உருளைக் கிழங்கு தருவிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு உருளைக்கிழங்கு செய்கைக்கென 200 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கை கொழும்பில் இருந்து தருவிப்பதற்கு யாழ் மாவட்ட விவசாய திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சென்ற ஆண்டு உருளைக் கிழங்கு செய்கைக்காக 400 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கு கொழும்பில் இருந்து கப்பல் மூலம் தருவிக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இவ்உருளைக் கிழங்கு செய்கை விவசாயிகளுக்கு நல்ல விளைச்சலை ஈட்டிக் கொடுத்தது. 170-ரி

## யாழ். வைத்தியசாலையில் திருட்டு முயற்சி தோல்வி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனு வைத்தியசாலையில் கடந்த சனிக்கிழமை இரவு திருட்டு முயற்சியில் ஈடுபட்ட கோஷ்டியினரின் நடவடிக்கை முறியடிக்கப்பட்டது.

திருடர் கோஷ்டியினர் சிலர் வைத்தியசாலை வளவிற்குள் புகுந்து டாக்டர்கள் தங்கும் விடுதி, தாதிகள் தங்கும் விடுதிகளுக்குள் புகுந்து திருட எடுத்த முயற்சி வைத்தியசாலை பாதுகாப்பு ஊழியர்களால்முறியடிக்கப்பட்டது

பாதுகாப்பு ஊழியர்களைக் கண்டு திருடர் கோஷ்டியினர் வைத்துயசாலை மதில்களால் ஏறிவிழுந்து தப்பி சென்று விட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக வைத்தியசாலை பாதுகாப்பு ஊழியர்கள் விழிப்பாக இரவு நேரத்தில் இருக்குமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார் 170-ரி

## உரம் தடுத்துவைப்பு

(கொழும்பு)

யாழ் நோக்கி கப்பலில் அனுப்பப்பட இருந்த 1500 மெற்றிக் தொன் அமோனியம் சல்பேற்று உரம் பாதுகாப்புப் படையினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

இந்த இரசாயன உரம் நைத்திரிக்கமிலத்துடன் கலக்கப்படின் அது வெடிபொருட்கள் தயாரிக்க ஏதுவானதாக அமையுமென பாதுகாப்பு அதிகாரிகள் கருதுவதால் இட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சண்டே லீடர் செய்தி வெளியிட்டுள்ளது. தீ-

## பம்பாய் வெங்காய செய்கை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்

அராலி, உரும்பிராய் ஆகிய பகுதிகளில் பம்பாய் வெங்காய செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்தமேமாத முற்பகுதியில் பெய்த கடும் மழையினுல் அராலி பகுதியில் பம்பாய் வெங்காய செய்கை முற்றுமுழுதாக வெள்ளத்தில் மூழ்கி அழிந்தது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் அராலி பகுதியில் பம்பாய் வெங்காய செய்கையை விவசாயிகள் மேற்கொண்டு வருவதோடு உரும்பிராயிலும் பம்பாய் வெங்காயம் பயிரிடப்பட்டுள்ளது. 170-ரி

நல்லூர் ஒளநூலகம்.

# புதையல் தேடிய பிக்கு பொலிஸாரால் கைது

(பொலனறுவை)

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தகுன்று ஒன்றின்பாறைகளை வெடிவைத்துத் தகர்க்கும் முயற்சியில் பௌத்த பிக்கு ஒருவரும் வேறு அறுவரும் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது பொலனறுவைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

சுதுகந்த காட்டில் கடவல ஏரிக்கு அப்பால் உள்ள இப்பாறைகளின் அடியில் ஒரு புதையல் இருப்பதாக கருதி அதைக் கைப்பற்றும்நோக்கில் அவர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டனராம்.

இது தொடர்பான சமய சடங்குகள் யாவற்றையும் பிக்குவானவர் முடித்த நிலையில் பாறையைத் தகர்ப்பதற்காக டைனமைற் வெடியைப் பொருத்திஞர்.

அவ்வேளை அவ்விடம் வந்த பொலிசார் அவர்களை கைது செய்தனர்.

டைனமைற் வெடித்திருந்தால் அப்பாறைகளில் செதுக்கப்பட்டிருக்கும் இரண்டு புராதன சிற்ப உருவங்கள் அழிந்து போயிருக்கும் எனப்பொலிசார் கூறுகின்றனர். தீ-கி

# சுகாதார பரிசோதனையின் பின்பும் உணவுப் பொருட்களில் கலப்படம்

(கொழும்பு)

கொழும்பில் சுகாதார அதிகாரிகளின் பரிசோதனையின் பின்பும் அனேகமான உணவுப் பொருட்களில் கலப்படம் இடம் பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. சுகாதார அதிகாரிகளின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்பு எவ்வாறு கலப்படம் செய்யப்பட்ட பொருட்கள் விற்பனைக்கு வருகின்றது என்பது ஆச்சரியமாகவே உள்ளது.

ஊழல் மோசடிகளே இதற்கு காரணம் எனவும் கூறப்படுகிறது. இவ் விடயத்தில் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமெனவும் பொருட்களை வாங்கும் போது அவதானமாக வாங்குமாறும் சுகாதாரப்பகுதியினர் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை பொருட்களில் கலப்படம் செய்து விற்பனை செய்த பல வர்த்தகர்கள் உணவுக்கட்டுப் பாட்டு பிரிவினரிடம் சிக்கியுமுள்ளனர். ர-சி

# கிழக்கில் பல்கலைக்கழகக் கல்லூரி நிறுவப்படும்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் தென்பகுதியில் பல்கலைகழக கல்லூரி ஒன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் ஆலோசனையின் பேரில் அமைக்கப்படவுள்ள இக் கல்லூரி, ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் கிழக்கு பல்கலைக் கழகத்திற்கு மேலதிகமாக செயற்படும்.

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலையில் இந்தக் கல்லூரியின் விரிவுரைகள் நடைபெறவிருக்கின்றன.

பல்கலைக் கழக கல்லூரியை நிறுவுவது சம்பந்மான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அமைச்சரவை உபகுழு ஒன்று விரைவில் நியமிக்கப்படும்.

இந்த வருடத்தில் பல்கலைக் கழகத்திற்கென தெரிவு செய்யப்பட்டிருக்கும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மாணவர்கள் புதிய பல்கலைக் கழக கல்லூரிக்கு அனுமதிக்கப்படவிருக்கின்றனர். கே-ரி

# யப்பான் விமானக்கடத்தல் பொலிஸாரால் முறியடிப்பு

(டோக்கியோ)

யப்பானின் ஜம்போ ஜெற் விமானத்தை கடத்திய நபர் யப்பானில் வடபகுதியிலுள்ள விமான நிலையமொன்றில் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

விமானத்தை திடீரென முற்றுகையிட்ட பொலிசார் விமானத்தினுள் சென்று அந்த நபரை மடக்கி பிடித்தனர்.

கடத்தல் காரர்கள் ஸ்கூட்றைவர் முறையில் விமானத்தை பலவந்தமாக கடத்தினர்

இந்த விமானத்தின் 350 பயணிகளும் 15 விமான சிப்பந்திகளும் அப்போது இருந்தனர்.

பிளாஸ்ரிக் குண்டு மூலம் விமானத்தை தகர்க்கப் போவதாக இந்த நபர் தெரிவித்த போது அவர் பிடிபட்ட பின் அங்கு அப்படியான குண்டு எதுவும் காணப்படவில்லை.

விமான பயணிகள் யாவரும் பாதுகாப்பாக இறக்கப்பட்டனர். ஒருவர் மாத்திரம் சிறு காயத்துக்கு உள்ளாஞர். கே-ரி

## புறக்கோட்டை சந்தை பஸ் நிலையமாக மாறுகிறது

(கொழும்பு)

புறக்கோட்டை மரக்கறிச் சந்தையை அப்புறப்படுத்தி அதில் பாரிய பஸ்நிலையம் ஒன்றை அமைக்க போக்குவரத்து அமைச்சர் திருமதி சிறீமானி அத்துலத்முதலி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இப்பகுதியில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடி காரணமாகவே இவ்விடத்தில் பஸ்நிலையம் அமைக்கப்படவுள்ளது.

பெருந் தொகையான மக்கள் போக்குவரத்துச் செய்யும் புறக்கோட்டை பஸ்நிலையம் முன்னர் சிறிதளவாகவே இருந்தது. இதனுல் மக்கள் போக்கு வரததின்போது பெரிதும் இடநெருக்கடியை அனுபவித்து வந்தனர். அதே வேளை மழைகாலத்தில் அப்பிரதேசம் சேறும் சகதியுமாகி பயணிகள் பெரும் சிரமப்பட்டனர்.

இதனையடுத்தே புறக்கோட்டை பஸ்நிலையத்தை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறீமானி அத்துலத்முதலி தெரிவித்துள்ளார். ர-சி

## கிளிநொச்சிக்கு 15லொறியில் உணவுப் பொருள்கள்

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு 15 லொறிகளில் உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் யாழ்ப்பாணம், மன்ஞர், கிளிநொச்சி, வவுனியா பகுதிகளுக்கு 14,900 பரல் மண்ணெண்ணெ அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. -ரி

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளருடன் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழு, நடாத்தும் விளையாட்டுக் கழகங்களுக்கான கலந்துரையாடல் நிகழ்வொன்று நாளை 24ம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு உறுப்பினர்களையும். யாழ் மாவட்டத்திலுள்ள சகல விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர்களையும் தவருது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுள்ளது. ரி

## யாழ். வைத்தியசாலையில் பனடோலுக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்போதனு வைத்தியசாலையில் பனடோல்வில்லைகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது.

யாழ். போதனு வைத்திய சாலைக்கு அண்மையில் ''ஹபரண'' கப்பலில போதியளவு பனடோல் குளிசைகள் வந்து சேராததினுல் பனடோலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்போது பனடோல் குளிசைகள் வைத்தியசாலையில் குறைந்தளவே கையிருப்பில் இருபபதால் கிளினிக்கில் பனடோல்குளிசைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வழங்கப்பட்டு வருகின்றன. 170-ரி

## பாணந்துறை

[1ம் பக்கத்தொடர்ச்சி]

கவும் இந்தச் சடலங்கள் தமிழருடையதாக இருக்கலாம் என்றும்சந்தேகிக்கப்படுகிறது.

இதுவரை கண்டெடுக்கப்பட்ட சடலங்களில் பலவற்றை அடையாளம் காண முடியவில்லையெனவும், ஆனுல் ஒரு சடலம் தமிழருடையது எனவும் பொலிஸ்மா அதிபர் பிராங்டீ சில்வா தெரிவித்திருக்கிருர். ரி-ம-கி

## காலியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திற்கு விரைந்த பொலிசார் இதன் உள்நோக்கத்தை அறிய தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகிருர்கள்.

குண்டு வெடிப்புச் சத்தம் இரு மைல் தூரம் வரை கேட்டது என தெரிவிக்கப்படுகின்றது. -கே-கி

## கட்சித் தலைவர் பதவியை ஜோன் மேஜர் துறக்கிருர்

(லண்டன்)

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் ஆளும் கொன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இன்னும் இரு வாரங்களில் நடக்கவிருக்கும் கட்சித் தலைவர் தேர்வில் தான் மீண்டும் தெரிவு செய்யப்படின் கட்சியின் தலைவராக இருந்து கொண்டு பிரதமர் பதவியையும் தொடர்ந்து வகிக்கப்போவதாக தெரிவித்த அவர் இத்தேர்வில் தோற்கும் பட்சத்தில் பிரதமர் பதவியையும் ராஜிஞமா செய்யப்போவதாகவும் அறிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் பிரதமரின் ராஜிஞமா அறிவிப்பைத் தொடர்ந்து பவுண் ஸ்ரேர்லிங் பெறுமதி தளம்பல் நிலையுற்றது. அதன் டொலர் பெறுமதி 50 வீதத்தால் குறைந்துவிட்டது. என பி.பி. ஸி. தெரிவித்தது. நீ-கி

## சோதிட உரையரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் உரையரங்கு 25ம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது,

'திருக்கணித பஞ்சாங்க அமைப்பு' என்ற பொருள் பற்றி திருக்கணித பஞ்சாங்க ஆசிரியர் சிவ ஸ்ரீ சிதம்பரநாதக்குருக்கள் உரைநிகழ்த்துவார்.

ஒன்றியத்தின் உப தலைவர் திரு எஸ், பத்மநாதன் 'சோதிடகலையும் நோய்களும்' என்னும் பொருள் பற்றிஉரையாற்றுவார். -சி

## உலக அழகியை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு- கிழக்கு யுத்தத்திஞலும், கொழும்பில் கேந்திர நிலையங்களில் இடம் பெற்ற குண்டுவெடிப்புக்களிஞலும் பாதிக்கப்பட்டுள்ள உல்லாசப் பயணிகள் வருகையை சீர் செய்யும் ஒரு 'கவர்ச்சி' நடவடிக்கையாக ஐஸ்வரியா விஸ கொழும்பு வருகையை ஏஜன்ஸி செய்தி நிறுவனமொன்று வர்த்துள்ளது. க-கி

## பயிற்சி ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆதரவுடன் உடனடி முதலுதவி பயிற்றுநர் பயிற்சி முன்னர் அறியத்தரப்பட்ட 24, 25-ம் திகதிகளில் நடைபெறமாட்டாது எனவும் காலம், இடம் என்பன விரைவில் அறியத் தரப்படும் எனவும் மாவட்ட சாரணர் ஆணையாளர் என். போஜான் அறிவித்துள்ளார்.

## கூட்டுறவுச் சங்க ஊழியர் விபரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் அதியுயர், முதுநிலை தரங்களைச் சார்ந்த பணியாளர்களின் சுயவிபரத்திரட்டு ஒன்றை அனுப்பிவைக்குமாறு வட. கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களைக் கேட்டுள்ளார்.

இவ் விபரத்தில் பணியாளர் பெயர், அடையாள அட்டை இலக்கம். வயது. மாவட்டம், பணிபுரியும் சங்கப் பெயர், வகிக்கும் பதவி, சேவைக்காலம், கல்வித்தகமை, தொழில் சார்தகமைகள், கூட்டுறவுப் பயிற்சியின் தன்மை, உள்ளூரில் பெற்ற புலமைப்பரிசில் ஆங்கில தகமைச் தேர்ச்சி ஒழுக்காற்று விசாரணைக்கு உட்பட்டிருப்பின் அதுபற்றிய விபரம் ஆகியன கேட்கப்பட்டுள்ளது. 170-

## கண்டெடுக்கப்பட்டது

திருமதி கந்தையா சரஸ்வதி என்பவருடைய அடையாள அட்டையும் நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்க வறுமை நிவாரண முத்திரை அடிக்கட்டை இரண்டும் திரு. இறப்பியல் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டது- உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.


## "உண்மையே உயர் அறம்"

இன்று நடைபெறும் எமது யா / சுன்ஞகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி கந்தரோடையின்

மேலைத்தேய வாத்திய அரங்கேற்றத்திற்கு

மனமார்ந்த வாழ்த்துக்களும் பாராட்டுதல்களும்.

இந்நிகழ்விற்கு உழைத்த ஆசிரியபழைய மாணவருக்கும், ஆசிரியர்க்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

"தகுதி என ஒன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப்பெறின்".

சேது விபா ஒபிற் சேவைகள் சேது விபுலானந்தா
சுன்ஞகம். க. அ. மு. உ. சா.

(சி-1526)

## இலங்கைத் தமிழர் தொடர்ந்த வழக்கில் டென்மார்க் முன்னாள் அமைச்சருக்கு 4 மாத ஒத்திவைக்கப்பட்ட சிறை!

(லண்டன்)

தமிழ் அகதிகள் தொடர்பான வழக்கொன்றில் அகதிகள் சட்டநெறிகளுக்குப் புறம்பாக நடந்துகொண்டார் என்ற குற்றச்சாட்டின்கீழ் டென்மார்க்கின் முன்னாள் நீதி அமைச்சர் ஒருவருக்கு 4 மாத ஒத்திவைக்கப்பட்ட தண்டனை வழங்கப்பட்டிருக்கின்றது.

டென்மார்க்கில் வசித்து வந்த இலங்கைத் தமிழ் அகதி ஒருவர் கொழும்பிலிருந்த தனது குடும்பத்தினருடன் டென்மார்க்கில் இணைவதற்கு இவ்வமைச்சர் அனுமதி மறுத்திருந்தாரென்று குற்றஞ்சாட்டப்பட்டு அவருக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றதென பி. பி. ஸி. தெரிவித்தது.

அகதிகள் தொடர்பான நடவடிக்கை ஒன்று காரணமாக இரண்டாண்டுகளுக்கு முன் டென்மார்க்கின் 'கொன்சவேட்டிவ்' அரசு தன்பதவியை ராஜினாமாச் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. தீ-கி

## முல்லை. கடற் பகுதியில் கடற்படை பீரங்கி தாக்குதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடற் பிராந்தியத்தில் நிலைகொண்டிருந்த ஸ்ரீலங்கா கடற்படை பீரங்கி படகு மேற்கொண்ட கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதலினால் மீனவ படகு ஒன்று முற்றாக சேதமானது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இத்தாக்குதலையடுத்து மீனவர்கள் பலரும் கடலுக்கு செல்ல அச்சம் தெரிவிக்கின்றனராம். -க-இ

## ஆயுர்வேத வைத்தியத்தில் சத்திர சிகிச்சை அறிமுகம்

(கொழும்பு)

ஆயுர்வேத வைத்தியத் துறை சத்திர சிகிச்சை, எரிகாயங்களுக்கான சிகிச்சை, குழந்தை வைத்தியம் என்பனவற்றில் முழுமையான பலனைக் கொடுக்கக் கூடிய வகையில் விருத்தி செய்யப்படவுள்ளது.

இதன் பொருட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்படவுள்ளது.

பொரளையிலுள்ள மத்திய ஆயுர்வேத வைத்தியசாலை இதற்கான கேந்திரநிலையமாக இருக்கும்

இங்கு விசேட பயிற்சிக்குள்ளாக்கப்படும் வைத்தியர்கள் நாடெங்கிலுமுள்ள வைத்திய சாலைகளில் பணிபுரிவர். -கி

## மரத்திலிருந்து விழுந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

சீவல் தொழிலாளி ஒருவர், தென்னை மரத்தில் இருந்து தவறி விழுந்து மரணமானார்.

இருபாலை தெற்கில் நேற்று முன்தினம் மாலை இச் சம்பவம் இடம்பெற்றது.

மரத்திலிருந்து விழுந்தவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்போது இடைவழியில் மரணமானார்.

இச்சம்பலத்தில் இருபாலை தெற்கைச் சேர்ந்த சிதம்பரி வேலுப்பிள்ளை (55 வயது) என்பவரே மரணமானவராவார். 90-சி

## போலி 'உரத் தொழிற்சாலை பேலியகொடவில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

'லக்பொஹர' என்ற வர்த்தகப் பெயரைப் பயன்படுத்தி, மோசடி வர்த்தகத்தை நடாத்திவந்த போலிஉரத்தொழிற்சாலையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது:

இங்கிருந்து 45 லட்சம்ரூபா பெறுமதியான உரம் கைப்பற்றப்பட்டது. இந்தத் தொழிற்சாலை பேலியகொடப் பகுதியில் இயங்கி வந்துள்ளது'

'லக்பொஹர' என்ற வர்த்தகக் குறியுடன் கூடிய உரத்தைக் கொள்வனவு செய்து போலி உரவகைகள் இத்தொழிற்சாலையில் கலக்கப்பட்டு அவை விற்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ம-கி

### அரசின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை சர்வதேச ரீதியிலும் அமெரிக்காவிலும் நாங்கள் உண்ணிப்பாக அவதானித்து வருகிறோம்.

இலங்கை அரசு மேற்கொள்ளும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க அமெரிக்கா முடிவெடுத்திருக்கிறது. இலங்கை அரசை எதிர்த்து போராடுவதற்கு விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் விற்கப்படுவதை அமெரிக்கா அனுமதியளிக்க மாட்டாது. தற்போதைய நிலை குறித்து அமெரிக்கா கவலை கொண்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். கே-கி

## இந்தியாவுடனான உறவை விருத்திசெய்ய முடிவு

(கொழும்பு)

இந்தியாவுடன் உறவை விருத்திசெய்ய அரசு முடிவெடுத்துள்ளதாக வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஐ தே. கட்சி ஆட்சிக்காலத்தின்போது இந்தியா சீனா ஆகிய நாடுகளுடன் இலங்கை திருப்திகரமான இராஜதந்திர உறவுகளை கொண்டிருக்கவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் மேற்கொண்ட ஜேர்மன் பயணத்தின் பின் கொழும்பில் பத்திரிகையாளர் மாநாட்டில் பேசுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். க-கி

### காத்தான்குடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யேறி விட்டதாக பத்திரிகைகள் தவறானசெய்தியை வெளியிட்டுள்ளன எனக் கூறினர்.

இதேவேளையில் காத்தான்குடியிருந்து ஆயிரத்திற்கு மேற்பட்ட முஸ்லிம் செல்வந்தர்கள் வெளியேறிவிட்டதாகவும் ஏனையோர் வெளியேற தயார் நிலையிலுள்ளதாகவும் ஐலன்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் காத்தான்குடி முஸ்லிம்கள் வெளியேறுவதாக கொழும்பில் திட்டமிட்ட அடிப்படையில் வதந்தி பரப்பப்பட்டுவருவதாகவும் செய்திகள் கூறுகின்றன. க கி

## மரண தண்டனை அமுலுக்கு பல அமைப்புகள் எதிர்ப்பு

(கொழும்பு)

மரண தண்டனையை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு அரசு எடுத்துள்ள முடிவுக்கு தெற்கில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது

மரண தண்டனை விவகாரத்தில் . ஐக்கிய தேசியக் கட்சி கைக்கொண்ட நடைமுறையையே தொடர்ந்தும் அமுல் செய்யும்படி பல மனித உரிமை அமைப்புக்கள் அரசைக் கோரியிருக்கின்றன.

ஐ தே.க. காலத்தில் மரண தண்டனையை நீதிமன்றம் வழங்கி வந்த போதிலும் மரணதண்டனை நிறைவேற்றப்படாமல் அது ஆயுள் தண்டனையாக அமுலாக்கப்பட்டு வந்தது.

மரண தண்டனைக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளதையடுத்து நீதியமைச்சர் பேராசிரியர் ஜே. எல். பீரிஸ் இது குறித்து அரசு கவனத்திலெடுக்குமெனத் தெரிவிக்கிறார்.

நீதிமன்றம் மரண தண்டனையை விதித்தாலும் அதை நிறைவேற்றுமுன் குற்றவாளி குறித்த பல விடயங்கள் கவனதிற்கெடுக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார். -கி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூன் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683613.

## பாதுகாப்பு நிதியத்துக்கு 30,000 ஆசிரியர்கள் உதவி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு யுத்தத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில் பாதுகாப்பு நிதியத்திற்கென தமது ஒருநாள்சம்பளத்தை வழங்குவதற்கு மத்திய மாகாணத்தை சேர்ந்த சுமார் 30ஆயிரம் ஆசிரியர்கள் முன்வந்துள்ளனர்.

இதேவேளையில் கடற்றொழில் ஊழியர்கள், மட்பாண்ட கூட்டுத்தாபன ஊழியர்களும் தமது ஒருநாள் சம்பளத்தை ஏற்கனவே வழங்கியுள்ளதாகவும் இந்நிதி மிக விரைவில் உரிய முறையில் பாதுகாப்பு நிதியத்தில் சேர்க்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. க-கி

## தேசியமொழியாக ஆங்கிலம் கருதப்படுமென அறிவிப்பு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்புச் சட்டத்தில் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டும் உத்தியோக பூர்வமொழிகளாக இருக்கும். இவற்றுடன் ஆங்கிலமும் தேசிய மொழியாக கருதப்படுமென நீதி மற்றும் அரசியல் விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது விடயம் தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்: புதிய அரசியலமைப்புத் திட்டத்தில் மொழி சம்பந்தமான அத்தியாயம் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வத்தியாயத்தில் உள்ள சீர்திருத்த பிரமாணங்களை அரசியலமைப்புச் சீர்திருத்த தெரிவுக் குழு அங்கீகரித்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தமிழும் ஏனைய மாகாணங்களில் சிங்களமும் உத்தியோக பூர்வ மொழியாகப் பயன்படுத்தப்படும்.

சகல சட்டங்களும் சிங்களம். தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் இருக்கும். சிங்களம், தமிழ் ஆகிய இரண்டிலும் கல்வி கற்க எவருக்கும் உரிமையுண்டு என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். -க-கி

### வடக்கு கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிக்கப்படவேண்டும். வடக்கு-கிழக்கு போருக்கு மேலும் எழுபதினாயிரம் பேரை இராணுவத்தில் இணைத்துக்கொள்ள வேண்டியிருக்கும்.

இராணுவத்திற்கு புதிதாக ஆட்களைச் சேர்ப்பதன்மூலமும் இராணுவத்தைவிட்டு தலைமறைவானோருக்கு பொதுமன்னிப்பு வழங்கி அவர்களை மீண்டும் இராணுவத்தில் இணைப்பதன்மூலமும் இத்தொகையை ஈடுசெய்ய படைத் தலைமை தீர்மானித்திருந்தது.

ஆனால் படைகளைவிட்டு ஓடியோர் அரசின் பொதுமன்னிப்புத் திட்டத்தை ஏற்று மீண்டும் சேவைக்கு வருவதில் அக்கறை காட்டாமையினாலும், எதிர்பார்க்கப்பட்டதைவிட குறைவானோரே இராணுவத்தில் புதிதாக இணைய முன்வந்திருப்பதாலும் இராணுவத்தைப் பலப்படுத்தும் அரசின் முயற்சியில் தடங்கல்கள் ஏற்பட்டிருப்பதாக ஏஜென்ஸி செய்தி கூறுகிறது.

### விறகு வெட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற இச்சம்பவத்தில் பிரான்பற்றைச் சேர்ந்த புண்ணியமூர்த்தி செல்லத்துரை (58-வயது) என்பவரே படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். -90-கி

## இந்திய அமைச்சரவையில் மீண்டுமொரு மாற்றம்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தனது அமைச்சரவையை மேலும் விரிவுபடுத்தப்போவதாக இந்தியப பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

அப்பத்திரிகைகள் மேலும் தெரிவிக்கையில்: பெரும்பாலும் அடுத்த வாரமளவில் அமைச்சரவை மாற்றம் இடம்பெறக்கூடும் என்றும் மாநில அமைச்சர்கள் 10 பேர் மத்திய அமைச்சர்கள் அந்தஸ்திற்கு உயர்த்தப்படக்கூடும் என்றும் தெரிவித்துள்ளனர்.

அடுத்த வருடம் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலையொட்டி மத்திய தர வர்க்கத்தினரை கவரும் நோக்கிலேயே இவ் அமைச்சரவை மாற்றம் இடம்பெறக்கூடும் என்றும் அப்பத்திரிகைகள் ஊகம் தெரிவித்துள்ளன.

அண்மையில் காங்கிரஸ்கட்சிக்குள் ஏற்பட்ட இழுபறியின்போது பிரதமர் ராவிற்கு முண்டு கொடுத்தவர்கள் சிலருக்கும் புதிய அமைச்சரவையில் சந்தர்ப்பம் வழங்கப்படக்கூடுமென்றும் எதிர்பார்க்கப்படுவதாகவும் பத்திரிகைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளையில் கடந்த மாதத்திலும் இது போன்றதொரு அமைச்சரவை மாற்றம் இடம் பெற்றதும் புதிய முகங்கள் பல அமைச்சரவைக்குள் சேர்க்கப்பட்டதும்தெரிந்ததே, க-கி

## இஸ்ரேலின் உதவியை பெறுவதில் எந்தவித தவறும் இல்லை

### கதிர்காமர் கூறுகிறார்

(கொழும்பு)

இஸ்ரேலுடன் ராஜீய உறவை மேற்கொள்வதில் எந்தவித தவறும் இல்லை என வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் நூற்றிஎண்பது நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அவற்றில் நூற்றிஐம்பது நாடுகள் இஸ்ரேலை அங்கீகரித்துள்ளன. இந்தவகையில் இலங்கையும் இஸ்ரேலுடன் ராஜீய உறவை கொண்டிருப்பதில் தவறேதும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்

இஸ்ரேலுடன் நெடுநாளாகப் பகைமை கொண்டிருந்த பாலஸ்தீன விடுதலை இயக்கம் கூட இஸ்ரேலுடனான உறவை எதிர்க்கவில்லை.

நாட்டின் நலன் கருதி இராணுவ ரீதியிலான உதவியையும், ஏனைய அபிவிருத்தி தொடர்பான பொருளாதார உதவிகளையும் இஸ்ரேலிடமிருந்து பெறுவதில் இலங்கை ஆர்வமாக இருப்பதாகவும் திரு. கதிர்காமர் தெரிவித்திருக்கிறார். -கி